**கொலன்னாவ நகர சபை**
**கொழும்பு மாவட்டம்**

---

## 1. நிதிக்கூற்றுக்கள்

### 1.1 நிதிக்கூற்றுக்கள் சமர்ப்பித்தல்

மீளாய்வாண்டிற்கான நிதிக்கூற்றுக்கள் 2016 மார்ச் 31 ஆந் திகதியும், முன்னைய ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்கள் 2015 மார்ச் 31 ஆந் திகதியும் கணக்காய்விற்கு சமர்ப்பிக்கப்பட்டிருந்ததுடன், மீளாய்வாண்டிற்கான கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் அறிக்கை 2016 ஜுலை 07 ஆந் திகதி சபையின் செயலாளருக்கு அனுப்பப்பட்டிருந்தது.

### 1.2 முனைப்பழியுள்ள அபிப்பிராயம்

இவ்வறிக்கையின் 1.3 பந்தியில் விவரிக்கப்பட்ட விடயங்களின் தாக்கத்தினை தவிர்ந்து கொலன்னாவ நகர சபையின் 2015 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமையையும் அத் திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான அதனது நிதிசார் செயலாற்றலினையும் பொதுவாக ஏற்றுக்கொள்ளப்பட்ட கணக்கீட்டுத் தத்துவங்களுக்கு இணங்க நிதிக்கூற்றுக்கள் உண்மையாகவும் நியாயமாகவும் தருகின்றன என்பது எனது அபிப்பிராயமாகும்.

### 1.3 நிதிக்கூற்றுக்கள் மீதான கருத்துரைகள்

#### 1.3.1 கணக்கீட்டுக் குறைபாடுகள்

(அ) மீளாய்வாண்டின் போது கொள்வனவு செய்திருந்த ரூபா 21,433 பெறுமதியான நிலையான சொத்துக்களை மூலதனப்படுத்தியிருக்கவில்லை.

(ஆ) மீளாய்வாண்டின் போது விபத்துக்கு ஆளாகிய வாகனங்களை பழுதுபார்ப்பதற்காக செலுத்த வேண்டிய ரூபா 24,944 இற்கான செலவுக்காக நிதி ஏற்பாடுகள் செய்திருக்காததுடன் அதனது தொடர்புடைய பெறவேண்டிய காப்புறுதி நட்டஈடும் கணக்கீடு செய்திருக்கவில்லை.

(இ) மீளாய்வாண்டின் போது இறுதி இருப்பபினை சான்றுறுதி செய்திருக்காததுடன் இருப்பு பதிவேட்டில் காட்டப்பட்டுள்ள ரூபா 34,755,432 தொகை பெறுமதியான இருப்பு மீதி என நிதிக்கூற்றுக்களில் காட்டப்பட்டிருக்கவில்லை.

(ஈ) மீளாய்வாண்டு ஆரம்பத்தில் நிலையான வைப்புக்கள் தொடர்பாக கிடைத்திருந்த மொத்த வட்டித் தொகையில் ரூபா 86,250 இற்கான தொகை ஒன்று பதிவழித்தலுக்காக கணக்கீடு செய்யப்படாமையால் வட்டி வருமானம் அதே தொகையால் மிகையாகக் காட்டப்பட்டிருந்தது.

(உ) மீளாய்வாண்டின் போது வங்கிக் கணக்கிற்கு கிடைத்த நேரடி பெறுவனவுகள் ரூபா 25,501 தொகையினை இனங்கண்டு நிதிக்கூற்றுக்களில் பதிவு செய்திருக்கவில்லை.

(ஊ) 2014 ஆண்டிற்கான களஞ்சிய முற்பணத்தின் கீழ் கொள்வனவு செய்திருந்த நடைமுறை ஆண்டின் போது கிடைத்திருந்த ரூபா 755,000 தொகை பெறுமதியான மருந்துகள் தொக்கு ஒன்றினை மீளாய்வாண்டின் போது கணக்குகளுக்கு எடுத்திருக்கவில்லை.

(எ) 2013 ஆண்டு தொடர்பாக கிடைத்திருந்த ரூபா 20,445,648 இற்கான முத்திரை வருமானம், முன்னைய ஆண்டின் வருமானத்துடன் சீராக்கல் செய்வதற்கு பதிலாக மீளாய்வாண்டிற்கான வருமானம் என கணக்கீடு செய்த காரணத்தினால் வருமானக் கணக்கு ரூபா 20,445,648 இனால் மிகையாகக் காட்டப்பட்டிருந்ததுடன் முன்னைய ஆண்டின் வருமானம் அதே தொகையால் குறைவாகக் காட்டப்பட்டுள்ளது.

(ஏ) மீளாய்வாண்டின் போது ரூபா 723,900 பெறுமதியான எரிபொருள் கொள்வனவுக்காக ரூபா 780,100 இற்கான கடன்கொடுத்தோர் ஏற்பாடு செய்திருந்தமையால் ஆண்டிற்கான எரிபொருள் செலவு மற்றும் கடன்கொடுத்தோர் ரூபா 46,200 இனால் மிகையாகக் காட்டப்பட்டுள்ளது

.

(ஐ) ஐந்தொகையில் நடைமுறை பொறுப்புக்களின் கீழ் காட்டப்பட்டுள்ள ரூபா 17,760,422 தொகைக்கான வைப்புக் கணக்கின் மீதியில் 2012 ஆண்டிற்கான உரிமை கோரப்படாத ரூபா 216,411 இற்கான ஓய்வூதியப் பணிக்கொடை இரண்டு தடவைகள் பதவி செய்யப்பட்டமையால் வைப்புக் கணக்கின் மீதி அப் பெறுமதியால் மிகையாகக் காட்டப்பட்டது.

(ஒ) 2015 திசெம்பர் 31 திகதியில் உள்ளவாறு மீளளிப்பு செய்யப்பட வேண்டிய அங்கத்தவர் படி ரூபா 1,7,797,000 தொகையாக இருந்த போதிலும் நிதிக்கூற்றுக்களில் அவை ரூபா 123,000 தொகை என காட்டப்பட்டுள்ளமையால் அத் திகதியில் உள்ளவாறு பெற வேண்டிய மீதி ரூபா 1,674,000 இனால் குறைவாகக் காட்டப்பட்டுள்ளது.

(ஓ) 2008 முதல் 2013 ஆண்டு வரை கடந்த 6 வருடங்களின் உரிமை கோரப்படாத வைப்புக்கள் ரூபா 2,179,691 தொகை திரண்ட நிதியத்திற்கு சீராக்கல் செய்யப்பட வேண்டுமெனினும் அவை மீளாய்வாண்டிற்கான வருமானம் என கணக்கீடு செய்திருந்தமையால் ஆண்டிற்கான வருமானம் அதே தொகையால் அதிகரித்துக் காட்டப்பட்டிருந்தது.

### 1.3.2 நிகழக்கூடிய பொறுப்புக்கள்

(i) மீளாய்வாண்டின் போது வெளி சாரார்களினால் சபைக்கு எதிராக தாக்கல் செய்யப்பட்டிருந்த 03 வழக்குகள் மற்றும் சபையினால் வெளிசாராருக்கு எதிராக தாக்கல் செய்யப்பட்டுள்ள 02 வழக்குகள் தொடர்பாக நீதிமன்றில் விசாரணை நடைபெற்றுக் கொண்டிருந்த போதிலும், இது தொடர்பாக நிதிக்கூற்றுக்களில் குறிப்பு ஒன்றாக வெளிப்படுத்தல் செய்திருக்கவில்லை.

(ii) கொலன்னாவ மீதொடமுள்ள பகுதியில் சபைக்குச் சொந்தமான குப்பை அகற்றும் குப்பை மலை நிறைந்து வழிந்து ஓடியமையால் மற்றும் உடைந்து விழுந்தமையால் பிரதேச மக்களின் வீடுகளுக்கு சேதம் ஏற்படல் சுற்றாடல் மாசடைதல், சுகாதார சிக்கல்கள் காரணமாக பிரதேச மக்களினால் சபைக்கு எதிராக 02 மனித உரிமைகளில் வழக்குத் தாக்கல் செய்திருந்தமையால் பொருளாதார நலன் ஒன்று வெளிச்செல்லும் சாத்தியம் காணப்படுவதால் அந்த நிகழத்தக்க பொறுப்புகள் தொடர்பாக நடைமுறை ஆண்டு கணக்குகளின் மூலம் வெளிப்படுத்தியிருக்கவில்லை.

### 1.3.3 இணக்கஞ் செய்யப்படாத கட்டுப்பாட்டுக் கணக்குகள்

10 கணக்கு விடயங்கள் தொடர்பாக கணக்குகளின் பிரகாரம் மீதிகளின் கூட்டுத்தொகை ரூபா 169,911,315 தொகையாகக் காணப்பட்டதுடன் அதனோடு தொடர்புடைய துணைப் பதிவேடு/ அறிக்கைகளின் பிரகாரம் அம் மீதிகளின் கூட்டுத்தொகை ரூபா 119,149,405 தொகையாகும்.

### 1.3.4 தீர்க்கப்படாத கணக்குகள்

பல வருட காலம் முதல் காணப்படும் கூட்டுத்தொகை ரூபா 512,020 தொகைக்கான 04 கணக்கு மீதிகள் தீர்க்கப்படாமல் முன்கொண்டு வந்து காணப்படுகின்றது.

**1.3.5 கணக்காய்விற்கான சான்றுகள் இன்மை**

**(அ) பதில் அளிக்கப்படாத கணக்காய்வு ஐய வினாக்கள்**

2016 ஜூன் 30 திகதியில் உள்ளவாறு கொடுக்கல் வாங்கல்களின் கணக்கிடக் கூடிய பெறுமதி ரூபா 1,033,569 தொகைக்கான 10 கணக்காய்வு ஐய வினாக்களுக்கு பதில் அனுப்பியிருக்கவில்லை.

**(ஆ) தகவல்கள் கணக்காய்விற்கு சமர்ப்பிக்கப்படாமை**

கணக்காய்விற்கு தேவையான தகவல்கள் சமர்ப்பிக்கப்படாமையால் கூட்டுத்தொகை ரூபா 86,417,222 தொகைக்கான கொடுக்கல் வாங்கல்களை கணக்காய்வின் போது திருப்திகரமாக சான்றுறுதி செய்வதற்கு முடியாதிருந்தது.

## 2. நிதி மீளாய்வு

### 2.1 நிதி விளைவுகள்

சமர்ப்பிக்கப்பட்டுள்ள நிதிக்கூற்றுக்களின் பிரகாரம் 2015 திசெம்பர் 31 திகதியில் முடிவடைந்த ஆண்டின் போது சபையின் மீண்டுவரும் செலவை விஞ்சிய வருமானம் ரூபா 53,261,623 தொகையாகக் காணப்பட்டதுடன் அதற்கு நேரொப்ப முன்னைய ஆண்டின் மீண்டுவரும் செலவை விஞ்சிய வருமானம் ரூபா 25,989,522 தொகையாகும்.

### 2.2 வங்கிக் கணக்கு

பின்வரும் விடயங்கள் அவதானிக்கப்பட்டன.

**(அ) மக்கள் வங்கி கொலன்னாவை - கணக்கு இலக்கம் 194100173792765**

வருடத்திற்கான நிதிக்கூற்றின் பிரகாரம் வங்கிக் கணக்கில் ரூபா 666,509 இற்கான மீதியொன்று காட்டப்பட்டிருந்ததுடன் வங்கிக் கூற்றின் பிரகாரம் அம்மீதி ரூபா 88,436 தொகை என 2010 ஆண்டு முதல் தொடர்ந்தும் கொண்டு வரப்பட்டு வந்துள்ளது. 2015 திசெம்பர் 31 திகதியில் உள்ளவாறு தயாரிக்கப்பட்ட வங்கிக் கணக்கு இணக்கக் கூற்றில் வங்கி மீதியில் பல வருட காலமாக முன்கொண்ட வரப்பட்டு காணப்படும் தேறப்படாத காசோலைகள், வங்கி பிழைகள் ஆக கூட்டுத்தொகை ரூபா 1,040,054 தொகை காட்டப்பட்டிருந்தது. மேற்கூறிய சீராக்கல்களை உறுதிப்படுத்துவதற்காக சான்றுகள் எதனையும் கணக்காய்விற்கு சமர்ப்பிக்கப்படாமையால் தயாரிக்கப்பட்டுள்ள வங்கி இணக்கக் கூற்று ஏற்றுக்கொள்ள முடியாத நிலைமையில் காணப்பட்டது.

**(ஆ) மக்கள் வங்கி – கொலன்னாவை நடைமுறைக் கணக்கு இலக்கம் 194100153792766**

1993 ஆண்டு முதல் காணப்படும் ரூபா 15,000 தொகைக்கான காசுமாற்றல் மற்றும் உறுதியாக கண்டுகொள்ள முடியாத தேறப்படாத காசோலைகள் ரூபா 10,104 தொகை வங்கிக் கூற்றில் மீதிகளுடன் கூட்டல்கள் என காட்டியிருந்த போதிலும், அவை தொடர்பாக உறுதிப்படுத்தல்களுக்காக போதியளவு சான்றுகள் கணக்காய்விற்கு சமர்ப்பிக்கப்படவில்லை.

3. வருமான நிருவாகம்

3.1 மதிப்பீட்டு வருமானம், உள்ளவாறான வருமானம் மற்றும் நிலுவை வருமானம்

மீளாய்வாண்டிற்காக சமர்ப்பித்திருந்த மதிப்பீட்டு வருமானம் உள்ளவாறான வருமானம் மற்றும் நிலுவை வருமானம் பற்றிய தகவல்கள் கீழே தரப்பட்டுள்ளன.

| வருமான விடயம் | ஜனவரி 01 திகதியில் நிலுவை மீதி | சிட்டை இடப்பட்டவை | உள்ளவாறான அறவீடுகள் | திசெம்பர் 31 திகதியில் உள்ளவாறு திரண்ட நிலுவை |
|---|---|---|---|---|
| | ரூபா. | ரூபா. | ரூபா. | ரூபா. |
| வீத வரி | 35,370,301 | 67,718,253 | 59,231,282 | 43,857,302 |
| அனுமதிப்பத்திரக் கட்டணம் | 3,350 | 355,600 | 316,750 | 42,200 |
| வாடகை | 2,029,634 | 4,163,532 | 2,841,399 | 3,351,767 |
| வர்த்தக வரி | 771,691 | 872,600 | 887,550 | 756,741 |

3.2 வீதவரி

முன்னைய ஆண்டின் திசெம்பர் 31 திகதியில் உள்ளவாறு திரண்ட நிலுவை வீதவரி ரூபா 35,370,301 ஆகக் காணப்பட்டதுடன் மீளாய்வாண்டு இறுதியில் உள்ளவாறு நிலுவை ரூபா 43,857,302 தொகை ஆகும். இதன் பிரகாரம் ரூபா 8,487,001 இனால் அதாவது 24 சதவீதத்தினால் மீளாய்வாண்டிற்கான நிலுவை வீதவரி அதிகரித்திருந்தது.

3.3 கடை வாடகை

மீளாய்வாண்டு இறுதியில் உள்ளவாறு நிலுவைக் கடை வாடகை ரூபா 3,351,767 ஆகக் காணப்பட்டதுடன் இந்த நிலுவையில் 30 சதவீதம் நிலுவை வீட்டு வாடகையாகும். மொத்த நிலுவை வாடகை முன்னைய ஆண்டுடன் ஒப்பாக 65 சதவீதத்தினால் அதிகரித்திருந்தது.

3.4 வர்த்தக வரி

2015 திசெம்பர் 31 திகதியில் உள்ளவாறு ரூபா 756,741 தொகைக்கான நிலுவை வர்த்தக வரி வருமான மீதி, முன்னைய ஆண்டிற்கான நிலுவை வருமானம் ஒன்றாகக் காணப்பட்டதுடன் மீளாய்வாண்டிற்கான சிட்டையிடப்பட்ட வர்த்தக வரி வருமானம் மீளாய்வாண்டின் போது அறவீடு செய்யப்பட்டிருந்தது. முன்னைய ஆண்டுகளில் இருந்து கொண்டுவரப்பட்ட மீதிகள் அவ்வாறே காணப்பட்டது.

4. செயற்பாட்டு மீளாய்வு

4.1 முகாமைத்துவத் திறமையின்மை

பின்வரும் விடயங்கள் அவதானிக்கப்பட்டன.

(அ) சபைக்குச் சொந்தமான பெறுமதி மதிப்பீடு செய்யப்படாத காணித் தொகையின் கூட்டுத்தொகை ஆகிய 4 ஏக்கர் 0 ரூட் 15.05 பர்சஸ் காணிகளுக்காக காணி உறுதிகள் கணக்காய்விற்கு சமர்ப்பிக்கப்படவில்லை.

(ஆ) சபைக்குச் சொந்தமான கொள்வனவு விலை ரூபா 3,406,365 தொகையான இசுசு F.R.R கம்பெக்டர் 2014 ஜூன் மாதம் முதல் என்ஜின் பழுதுபார்த்தல் ஒன்றிற்காக ஓட்ட நிலையில் இருந்து அகற்றப்பட்டிருந்தது. இந்த வாகனத்தை விரைவாக

பழுதுபார்த்து சேவையில் ஈடுபடுத்தாமல் கழிவுப் பொருட்கள் அகற்றுவதற்காக வாடகை வாகனம் ஒன்று ஒரு நாளைக்கு ரூபா 8,000 வீதம் 02 வாகனங்களுக்காக (2015 அக்தோபர் 31 திகதி முதல் 2015 திசெம்பர் 31 வரை) ரூபா 928,000 இற்கான தொகையொன்று செலுத்தப்பட்டிருந்தது.

(இ) நகர சபைக் கட்டளைச் சட்டத்தின் (அதிகாரம் 255) பிரிவு 159(1) ஏற்பாடுகளுக்கு முரணாக மீளாய்வாண்டின் போது நகர சபையின் தலைவர், உப தலைவர் மற்றும் சபை செயலாளரின் தனிப்பட்ட பாவணைக்காக தொலைக்காட்சி தொடர்பு (PEO TV) கட்டணமாக ரூபா 23,428 இற்கான பில்பத்திரம் சபை நிதியத்தில் இருந்து செலவிடப்பட்டிருந்தது.

(ஈ) 2015 திசெம்பர் 31 ஆம் திகதியில் உள்ளவாறு தீர்க்கப்படாத முற்பண மீதியான ரூபா 4,409,650 தொகை தொடர்பாக இலங்கை குடியரசின் நிதிப்பிரமாணங்கள் 371(5) பிரகாரம் நடவடிக்கை எடுத்திருக்கவில்லை.

(உ) சபையில் 8 வருடங்களுக்கு முன்னர் இருந்து காணப்படும் ரூபா 9,625,340 தொகைக்கான வைப்புக்கள் தொடர்பாக இலங்கை குடியரசின் நிதிப் பிரமாணங்கள் 571 பிரகாரம் செயற்பட்டிருக்கவில்லை.

(ஊ) இலங்கை குடியரசின் நிதிப்பிரமாணங்கள் 762 இன் பிரகாரம் களஞ்சியத்திற்குத் தேவையான அளவு பண்டங்கள் மாத்திரம் இருப்பு வைத்திருத்தலும் மிகையான இருப்பு வைத்திருக்காமையும் களஞ்சிய உத்தியோகத்தர்கான கடமை ஒன்றாக இருக்க வேண்டுமெனினும் சபையினால் கொள்வனவு செய்திருந்த கூட்டுத்தொகை ரூபா 628,692 தொகைக்கான 63 விடயங்கள் தொடர்பாக களஞ்சியப் பண்டங்கள் இருப்பு ஒன்று வழங்கப்படாமல் களஞ்சியத்தில் காணப்பட்டது. பண்டங்கள் சேகரிக்கப்பட்டிருந்த காலம் 06 மாதம் முதல் 27 மாதம் வரையான காலவீச்சில் காணப்பட்டது.

(எ) 2015 ஏப்ரல் 11 ஆந் திகதி பிரதான செயலாளர் (மாகாண நிதி அமைச்சு) மற்றும் மாகாண திறைசேரி செயலாளரின் இலக்கம் 06/2015 கொண்ட நிதி சுற்றறிக்கையின் பிரகாரம் நகர சபை செயலாளரின் வாசஸ்தல மற்றும் கையடக்கத் தொலைபேசிக் கட்டணம் உச்ச வரையான ரூபா 2,500 தொகை எனினும் மீளாய்வாண்டின் போது அந்த வரையறையினை மிகைத்து 6 மாதங்களுக்காக ரூபா 6,659 இற்கான தொகையொன்று சபை நிதியத்தில் இருந்து செலவிடப்பட்டுள்ளது.

**4.2 பதவியணிக் கடன்**

2015 திசெம்பர் 31 திகதியில் உள்ளவாறு அறவிடப்பட வேண்டிய பதவியணிக் கடன் மீதிகளின் கூட்டுத்தொகை ரூபா 33,786,452 தொகையாகக் காணப்பட்டதுடன் அவற்றில் இடமாற்றம் பெற்றுச் சென்றுள்ள மற்றும் ஓய்வு பெற்றுள்ளவர்களின் நிலுவைக் கடன் மீதி ரூபா 2,970,941 தொகையாகும். அவை ஒட்டு மொத்த அறவிடப்பட வேண்டிய நிலுவை மீதியின் 8 சதவீதமாக காணப்பட்டதுடன் நிலுவை மீதி தொடர்பாக காலப்பகுப்பாய்வு ஒன்று சமர்ப்பித்திருக்கவில்லை.

**4.3 சர்ச்சைக்குரிய தன்மையுள்ள கொடுக்கல் வாங்கல்கள்**

2014 ஆண்டின் போது பொருளாதார அபிவிருத்தி அமைச்சு மற்றும் நகர சபையுடன் சேர்ந்து செயற்படுத்திய பொருளாதார அபிவிருத்தி நிகழ்ச்சித் திட்டத்திற்காக சபையின் நிருவாகச் செலவுகளை தீர்ப்பதற்காக பொருளாதார அபிவிருத்தி அமைச்சில் இருந்து பெற்றிருந்த ரூபா 100,000 இற்கான தொகை மேற்கூறிய நிகழ்ச்சித் திட்டத்தை செயற்படுத்தும் போது சபை நிதியத்தில் இருந்து செலவிடப்பட்ட (காகிதாகிகள் செலவு, தொலைபேசிச் செலவு, எரிபொருள் செலவு) செலவுகளை தீர்ப்பதற்காக ஏதேனும் ஒரு சலுகை கொடுப்பனவு ஒன்றின் சபை நிதியத்திற்கு செலவு வைக்காமல் மேற்கூறிய ரூபா

100,000 தொகை ஏதேனும் சட்ட அடிப்படை மற்றும் அங்கீகாரமின்றி செயலாளர், தலைவர் உட்பட 18 உத்தியோகத்தர்கள் இடையே பகிரப்பட்டிருந்தது.

### 4.4 திண்மக் கழிவுப்பொருள் முகாமைத்துவம்

#### 4.4.1 பிலிசரு செயற்திட்டத்தின் கீழ் ஆரம்பிக்கப்பட்டிருந்த பொதுவில் வயல்நில சேதனைப் பசளைத் தளம்

மத்திய சுற்றாடல் அதிகார சபை மற்றும் நகர அபிவிருத்தி அதிகார சபை இணைந்து கொலன்னாவ நகர சபையில் குப்பை முகாமைத்துவ செயல்முறை ஒன்று செயற்படுத்துவதற்காக நகர அபிவிருத்தி அதிகார சபையினால 04 ஏக்கர் காணி உரித்தாக்கப்பட்டு மற்றும் மத்திய சுற்றாடல் அதிகார சபையினால் சேதனப் பசளை தளம் ஒன்று நிர்மாணிப்பதற்கும் நகர சபையினால் திண்மக் கழிவுப்பொருள் முகாமைத்துவ செயற்திட்டம் ஆரம்பிக்கப்பட்டு அதனை நடாத்துவதற்கும் 2009 மே 06 ஆந் திகதி உடன்படிக்கை ஒன்று மேற்கொள்ளப்பட்டிருந்தது. 2012 ஆண்டு முதல் 2014 மே மாதம் வரை மேற்கூறிய செயற்திட்டம் அமுலில் இருந்ததுடன் இக் காலப்பகுதியில் சேதனப் பசளை விற்பனை மூலம் ரூபா 162,462 இற்கான வருமானம் ஒன்று உழைத்திருந்தது. 2014 மே மாதத்தில் சேதனப் பசளை தளத்திற்கு மேல் குப்பை மலை உடைந்து விழுந்ததினால் அதன் செயற்பாடுகள் முற்றாக நிறுத்தப்பட்டிருந்ததுடன் அச் செயற்திட்டத்தை மீண்டும் செயற்படுத்தி நடாத்திச் செல்வதற்கு சபை உரிய நடவடிக்கை எடுத்திருக்கவில்லை.

#### 4.4.2 சுற்றாடல் சார் சிக்கல்கள்

கொலன்னாவ நகர எல்லையில் அமைந்துள்ள மீதொட்டமுள்ள குப்பை தளத்திற்கு கொழும்பு மா நகர சபை மற்றும் கொலன்னாவ நகர சபை மூலம் குப்பை குவிக்கப்படுவதினால் கடினமாக சுற்றாடல் சிக்கல்களை போலவே சுகாதார சிக்கல்கள் ஏற்பட்டுள்ளதாக கணக்காய்வின் போது அவதானிக்கப்பட்டது. சுற்றாடல்களில் துர்நாற்றம் பரவியிருந்ததுடன் பிரதேசத்தில் கிணற்று நீர் மாசடைந்திருந்தது. பக்கத்து வீடுகளில் வசிக்கும் மக்கள் மூச்சுடன் தொடர்புடைய நோய்களுக்கும், தோல் நோய்களுக்கும் ஆளாகியிருந்ததுடன் நீர் மாசடைந்ததால் வயிற்றுடன் தொடர்புடைய நோய்களுக்கு ஆளாகிய நோயாளர்கள் காணப்பட்டனர் என பிரதேச சுகாதார வைத்திய உத்தியோகத்தரின் அறிக்கைகளின் மூலம் வெளிப்படுத்தப்பட்டது. இதன் பிரகாரம் நாளுக்கு நாள் உயர்ந்து செல்லும் குப்பை மலையின் காரணமாக பக்கத்து வீடுகளில் வசிக்கும் மக்களின் உளவியல் சார், சுற்றாடல் சார், சமூகசார் மற்றும் பொருளாதார சார் சிக்கல்கள் தீவிரமாக தாக்கியுள்ளதென அவதானிக்கப்பட்டது.

### 4.5 ஒப்பந்த நிருவாகம்

2015 ஆண்டின் போது செயற்படுத்துவதற்கு திட்டமிட்டிருந்த மதிப்பீட்டுப் பெறுமதி ரூபா 29,413,215 தொகைக்கான 75 நிர்மாண வேலைகளை ஆரம்பிப்பதற்கு நடவடிக்கை எடுத்திருக்கவில்லை.

## 5. கணக்களிப்பொறுப்பும் நல்லாளுகையும்

### 5.1 உள்ளகக் கணக்காய்வு

உள்ளகக் கணக்காய்வுப் பரிவு செயற்பட்ட போதிலும் 2015 ஆண்டிற்கான உள்ளகக் கணக்காய்வு நிகழ்ச்சித் திட்டம் கணக்காய்விற்காக சமர்ப்பித்திருக்கவில்லை. அத்துடன் உள்ளகக் கணக்காய்வு ஒன்று நடைபெற்றிருக்கவில்லை.

### 5.2 சொத்துக்கள் முகாமைத்துவம்

#### 5.2.1 விளைவற்ற மற்றும் குறைவாகப் பயன்படுத்தப்படும் சொத்துக்கள்

கூட்டுப்பெறுமதி ரூபா 1,011,875 தொகைக்கான 05 பழுதுதடைந்த வாகனங்கள் மற்றும் செயற்படாத நிலையில் காணப்பட்ட ரூபா 3,406,365 தொகைக்கான கொம்பெக்டர்

ஏலவிற்பனை மூலம் அகற்றுவதற்கு அல்லது பழுதுபார்த்து பயன்படுத்துவதற்காக நடவடிக்கை எடுக்க வேண்டும் எனினும் அவை நகர சபை வளவில் துருப்பிடித்த நிலையில் காணப்பட்டது.

### 5.2.2 வருடாந்தப் பண்டக் கணிப்பீடு

மீளாய்வாண்டின் போது பண்டக் கணிப்பீடு ஒன்று நடைபெற்றிருக்கவில்லை.

## 6. முறைமைகள் மற்றும் கட்டுப்பாடுகள்

பின்வரும் முறைமைகள் மற்றும் கட்டுப்பாட்டுப் பரப்புகள் தொடர்பாக விஷேட அவதானம் தேவைப்படுகின்றது.

(அ) உள்ளகக் கணக்காய்வு
(ஆ) கணக்கீடு
(இ) நிதிக் கட்டுப்பாடு
(ஈ) வருமான நிருவாகம்
(உ) ஒப்பந்த நிருவாகம்
(ஊ) இருப்புக் கட்டுப்பாடு